அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை/ All Rights reserved

# வடமேல் மாகாண கல்வித் திணைக்களம்
# Provincial Department of Education - NWP

43 T I

முதலாந் தவணைப் பரீட்சை – தரம் 13 – 2018

**First Term Test - Grade 13 - 2018**

சுட்டெண் : ......................

கிறிஸ்தவம் I
Christianity I

காலம் : 2 மணி

- **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**
- **1 தொடக்கம் 50 வரையான சகல வினாக்களுக்கும் I, II, III, IV, V என்கிற விடைகளிலிருந்து சரியான விடையினை தெரிவு செய்க.**

01. (கி.மு 444-432) காலத்தில் யூத நாட்டின் ஆளுநராக பணியாற்றியவர்
    1. நெகேமியா 2. எஸ்ரா 3. செதேக்கியா 4. யோசியா 5. செப்பனியா

02. யூதர்கள் இணைந்திருமுறை நூல்களை தமது திருவிவிலியத்திலிருந்து நீக்கியமைக்கான காரணம்
    1. யூதர்கள் எவ்விதத்திலும் செப்துவாஜிக், பிரதிகளை நிருபிக்க மறுத்தமை
    2. வாதம் பிரதிவாதங்களில் உலகப்படைப்பையும் மெசியாவின் வருகையையும் பற்றி நிருபிக்க ஞான நூல்களை பதித்தமை
    3. திருவிவிலியத்தில் இறை ஏவதல் இடம் பெறுவது எபிரேயர் பிரதியின்படி என்பதே யூதர்களின் கருத்தாகும்.
    4. தர்க்க விவாதங்களின் போது ஆரம்பகால திருச்சபை கிறிஸ்துவின் இறைதன்மை மற்றும் மெசியா பற்றிய உண்மைகளை உறுதி செய்ய இணைந்திருமுறை நூல்களை உபயோகித்தமை
    5. யூதர்கள் பாவித்த பழைய எற்பாட்டு நூல்கள் 39 இற்கு புதிய நூல்கள் சேர்ப்பது தகுதியற்றவை என்று கூறுதல்

03. திருவிவிலியத்தில் எபிரேயப்பிரதிகளை கிரேக்க மொழிக்கு மொழி பெயர்க்கப்பட்டது.
    1. பலஸ்தீனா மக்களிடையே இருந்த பொது நூல்
    2. டயஸ்பொராவில் யூதர்களிடையே இருந்த பொது நூல்
    3. யூதர்களிடையே இருந்த பொது நூல்
    4. பபிலோனிய அடிமைத்தனத்தின் பின் எழுதப்பட்ட பொது நூல்
    5. உரோமைய ஆக்கிரமிப்புக்குப் பின் எழுதப்பட்ட நூல்

04. ஜெஸ்ரேல் சமவெளியுடன் தொடர்புடைய யேசுவின் பகிரங்க வாழ்வின் முக்கிய நிகழ்வானது.
    1. கலிலேயக் கடல் மீது நடத்தல்
    2. இலாசரசை உயிர்ப்பித்தமை
    3. நயீன் ஊர்க் கைம் பெண்ணின் மகனை உயிர்ப்பித்தமை
    4. கலிலேயக் கடலில் புயலை அடக்கியமை
    5. காணாவூர் திருமணவீட்டில் தண்ணீரை இரசமாக்கியமை

05. மூட நம்பிக்கையில் இருந்த அசிரிய மக்களும் இஸ்ரயேல் மக்களுக்கும் இடையே நடந்த திருமணத்தின் பிரதிபலனாக வருவது.
    1. கனானியர் என்ற மக்கள் உருவாகுதல்
    2. பரிசேயர்களுக்கு ஏற்ற மக்கள் கூட்டம் உருவாகுதல்
    3. கலப்பு தீமையான மக்கள் கூட்டம் உருவாகுதல்
    4. இஸ்மேயலுக்கு ஏற்ற இனம் உருவாகுதல்
    5. யூத இனத்திற்கு உறவு சொல்லும் மக்கள் கூட்டம் உருவாகுதல்

06. பெரிய ஏரோது அரசரின் மூத்த மகன்
    1. ஆளுநர் ஆர்க்கலாவு 2. ஆளுநர் இரண்டாவது ஏரோது பிலிப்பு 3. ஏரோது அந்திபாஸ்
    4. ஆளுநர் பொந்தியு மிலாத்து 5. ஆளுநர் பெரிய அலெக்சாண்டர்

07. நாடுகடத்தப்பட்ட காலத்தில் யூதர்கள் நாடுகடத்தப்பட்டமையை எண்ணிய விதம்
    1. யூத மக்கள் இறைவனுக்கெதிராக செய்த குற்றங்களுக்கு அளித்த சாபமாக
    2. யூத மக்களுக்கு இறைவனின் இறைவிருப்பத்தை நிறைவேற்ற
    3. தாங்கள் இறைவனுக்க கீழ்படியாமல் இறைவனை மறுத்தமை
    4. அதிகாரிகள் அவர்களை இறைவனிடமிருந்து பிரிப்பதற்கு எடுத்த செயற்பாடாக
    5. புதியதொரு எதிர்காலத்திற்கு யூத மக்கள் தங்களைத் தூய்மையாக்கலும் மற்றும் ஆயத்தமாக்கலும் என எண்ணினர்.

08. காட்சி, கனவு மற்றும் தேவதூர்கள் வழியாக இறைவன் மனிதனோடு கதைத்தமை கூறும் மரபு
1. எலோகிம் 2. யாவே 3. இணைந்திருமுறை 4. குரு 5. யாவே, மற்றும் குரு

09. யாவே மற்றும் எலோகிம் மரபு பற்றி திருவிவிலியத்தில் கூறும் நூல்கள்
1. இறைவாக்கினர் நூல் 2. வரலாற்று நூல் 3. பஞ்சாகமம்
4. இணைதிருமுறை 5. ஞான நூல்

10. இஸ்ரயேலருடைய புனிதத்துவத்தின் சின்னமாக காணப்பட்டது.
1. திருவிவிலியம் 2. உடன்படிக்கை பேழை 3. தேவதூதர்கள் 4. தகனப்பலி 5. எரிபலி

11. ஆபிரகாம் நீண்ட ஆயுள் கொண்ட முதிர்ந்த வயதில் இறுதி மூச்சு விட்டு இறந்தார். ஈசாக்கும் இஸ்மயேலும் அவரை அடக்கம் செய்த இடம்
1. பெயர்செபாடுகை 2. ஆரானின் கற்குகை 3. மத்பேலா குகை
4.பெத்தேல் கற்குகை 5. காணான் தேசத்தில்

12. வாழ்வின் மரம் என்பது
1. இறைபடைப்பின் சின்னமாகும் 2. பாவத்தின் பாதையை காட்டி கொடுக்கும் சின்னம்
3. அன்பின் அடையாளம் 4. வெற்றியின் சின்னம்
5. சாகவரத்தைக் குறிக்கும் மத்திதரைப் பிரதேசங்களின் ஒரு அடையாளம்.

13. மனிதருக்குக் கிடைத்த முதல் விடுதலை நற்செய்தி ஆரம்ப நற்செய்தியாக அறிமுகப்படுத்தியவர்
1. புனித ஜெரோம் 2. யூலியன் வெல்ஷவுசன் 3. எட்க்வென்
4. புனித ஜரனியஸ் 5. புனித இங்னேசியால்

14. யாக்கோபு தேவதூதருடன் மற்போர் செய்த இடம்
1. ரகுவேல் 2. பெனியேல் 3. எப்ரேன் 4. மிதியான் 5. பெத்தேல்

15. எழுத்து வடிவம் பெறாத இறைவாக்கினர் கூறியவற்றை குறிக்கும் நூல்
1. சாமூவேல் மற்றும் அரசர்கள் 2. யோபு சங்கீதம்
3. தானியேல் மற்றும் சபை உரையாளர் 4. ஒசேக்கியேல், இனிமைமிகு பாடல்
5. ஆமோஸ், ஆகாய்

16. முதல் முறையாக மெசியா பற்றிய இறைவாக்கை தாவீது அரசனுக்கு கூறுபவர்
1. யோனா இறைவாக்கினர் 2. மீக்கா இறைவாக்கினர் 3. ஒசியா இறைவாக்கினர்
4. யோவேல் இறைவாக்கினர் 5. நாத்தான் இறைவாக்கினர்

17. (எசாயா 11/1-9) கு எற்ப மெசியா மீது இறைவனின் ஆவி நிழலிடும் அதனூடாக கிடைக்கும் நன்மைகளுள் புரிந்து கொள்ளுதலின் கருத்து
1. நீதியான தெளிவான வாழ்விற்கு முகங்கொடுக்கும் ஆற்றல்
2. இறைவனின் விருப்பத்தை தெரிவு செய்யும் ஆற்றல்
3. இன்னொருவரை நல்வழிப்படுத்தும் ஆற்றல்
4. அனுபவங்கள் ஊடாக பெறப்படும் தெளிவு
5. இறை கட்டளைகளைப் பின்பற்ற வாழக் கொடுக்கப்படும் ஆற்றல்

18. எரேமியா இறைவாக்கினர் தன் இறைபணியை செயற்படுத்தியது மூன்ற அரசர்களின் கீழ்
1. யோத்தாம், ஆகாஸ், செனியா 2. யோசியா, யோயாக்கிம், செநேக்கியா
3. யோத்தாம், ஆகாஸ், செதேக்கியா 4. யோசியா, யோயாக்கிம், எசக்கியா
5. ஆகாஸ், யோசியா, யோத்தாம்

19. திருப்பாடல் வகைப்படுத்தலும் நீதியோடும் நியாயத்தோடும் வாழ்வதற்காக மக்களை பலப்படுத்துவதற்கு கற்று கொடுக்கும் பாடல்
1. நன்றி பாடல் 2. அரசபாடல் 3. புகழ்ச்சிப்பாடல் 4. சீமோன் பாடல் 5. ஞான பாடல்

20. நன்மையான விடயங்களை கட்டியெழுப்பவும் தீமையான விடயங்களை அழித்துவிடவும் அனுப்பப்பட்ட இறைவாக்கினர்.
1. எரேமியா இறைவாக்கினர் 2. எசாயா இறைவாக்கினர் 3.ஆமோஸ் இறைவாக்கினர்
4. எசேக்கியேல் இறைவாக்கினர் 5. ஒசியா இறைவாக்கினர்

21. இறைவாக்கினருள் ஒசியா இறைவாக்கினரை அடையாளப்படுத்துவது.
1. இறைவனின் அன்பின் இறைவாக்கினர் 2. இறைவனின் நணபர் 3. இறைவனின் பலம்
4. இறைவன் மீட்பவர் 5. இறைவனின் நன்மை

22. லூக்கா நற்செய்தி எழுதப்பட்ட இடம்
1. உரோம் 2. அகாயா 3. ஜெருசலேம் 4. கைசாரிய 5. லூஸ்ரா

23. எல்லா நற்செய்திகளிலும் கூறப்படும் புதுமை
1. தண்ணீரை இரசமாக்குதல்
2. குருடனுக்கு பார்வை அளித்தல்
3. இலாசரை உயிர்ப்பித்தல்
4. ஐம்பதாயிரம் பேருக்கு உணவளித்தல்
5. பெர்சாய்தாவில் தொளுநோயாளரை குணப்படுத்தல்

24. கிரேக்க, உரோம மொழிகளில் நிபுணத்துவம் பெற்று பிற இனத்தவரின் திருத்தூதராக பணியாற்றியவர்.
1. புனித பேதுரு 2. புனித யாக்கோபு 3. புனித பவுல் 4. இஸ்தேவான் 5. பிலிப்பு

25. பவுல் எழுதிய திருமுகங்களுள் ஒரு கடிதத்தில் வடிவில் எழுதிய மிக குறுகிய கடிதமானது.
1. பிலமோனுக்கு எழுதிய திருமுகம்
2. தீமொத்தேயுவிற்கு எழுதிய திருமுகம்
3. தீத்துவுக்கு எழுதிய திருமுகம்
4. பிலிப்பியருக்கு எழுதிய கடிதம்
5. எபேசியருக்கு எழுதிய கடிதம்

26. உரோமைய ஆட்சிகாலத்தில் ஜெருசலேம் தேவாலயத்தில் தலைமைத்துவம் வகித்தவர்
1. திபேரியல் அதிகாரி 2. பொந்தியூபிலாந்து 3. ஏரோது அன்டிபஸ்
4. தலைமைக்குருக்கள் 5. யேசு கிறிஸ்து

27. "பரிசி" என்ற சொல்லின் பொருள்
1. பிரிந்திருத்தல் 2. சமாதானமாக இருத்தல் 3. அன்பாக இருத்தல்
4. செபம் ஊடாக இருத்தல 5. ஒன்று கூடி இருத்தல்

28. வேறொருவரிடமிருந்து கற்கின்ற ஒருவர் என்ற பொருட்படும் கிரேக்கச்சொல்
1. சமார் 2. சலோமி 3. மத்தாரெஸ் 4. மகாரியோ 5. அப்போஸ்டோலொஸ்

29. பவுலின் பிலிப்பிய மறைதூதுப்பணியின் மத்திய நிலையாமாக சேர்த்து கொண்ட வீடு யாருடையது?
1. லீதியாவின் வீடு 2. பர்னபாரின் வீடு 3. சீலாவின் வீடு
4. அகிலாவின் வீடு 5. பிரிஸ்சில்லாவின் வீடு

30. மத்தேயு நற்செய்தியின்படி நிறைவு காலம் பற்றிய போதனையின் (மத் 24/1-25/46) முடிவு
1. தோழியர் 10 பேர் பற்றிய உவமை
2. மூன்று பணியாளர்
3. மக்களினத்தார் அனைவரினதும் தீர்ப்பு நாள்
4. நம்பிக்கைக்குரிய பணியாளர்
5. அத்திமர உவமை

31. இறையாட்சி சிறியளவில் மற்றும் கண்ணுக்கு புலனாகாதவாறு ஆரம்பிக்கப்பட்ட போதும் காலஞ்செல்லச் செல்ல அது வெளியடையாகத் தெரிகின்றது என்பது குறித்து கூறும் உவமைகள்
1. புதையல், முத்து உவமை
2. கடுகு விதை, புளிப்பு மாவு உவமை
3. கோதுமை, புதையல் உவமை
4. விதைப்பவர் உவமை, கடுகு
5. கோதுமை உவமை, முத்து விதை உவமை

32. வெளி இருளில் போடுவது என்பது
1. உலகம் அமைந்து உள்ளது நன்மை தீமை ஒன்றாய் இருப்பதற்க அதில் தீமை ஒதுக்கி வைப்பது.
2. நல்லாண்டவரின் ஆட்சிக்கு நடுவில் தீயர் வாழும் இடம்
3. ஆழந்த தர்மத்தை இலகுவாக புரிந்து வாழும் மக்களுக்கு நடக்கும் விதியாகும்.
4. கடவுளை ஏற்றுக் கொள்ளாதவர்களின் விதி
5. சுவர்க்கத்திலும் பூலோகத்திலும் எல்லாவற்றிற்கும் வல்லமை கடவுளுக்கு மாத்திரம் உண்டு

33. துன்ப வேதனைகள் பற்றிய முன்னறிவித்தலின் பின்பு நான்கு நற்செய்தியிலும் கூறப்படும் நிகழ்வானது.
1. பெத்தானியாவில் நறுமண தைலம் பூசுதல் நடைபெற்றது.
2. யூதாசின் காட்டிக் கொடுத்தல்
3. இலாசரஸ்சை உயிர்ப்பித்தல்
4. கல்லறையிலிருந்து புனிதர்கள் உயிர்தெழுதல்
5. பிலாத்துவின் மனைவியை சம்பந்தப்பட்ட கனவு

34. யேசு கிறிஸ்து புதிய ஏற்பாட்டில் கூறும் "நான் உங்களுடன் புதிய திராட்சைப்பழ இரசத்தை அருந்தும் காலம் வரும் வரை" என்பதின் கருத்து
1. காட்டிக் கொடுத்தல் சம்பந்தமாக கூறியது
2. காட்டிக் கொடுத்தல் சம்பந்தமாக கூறியது
3. மீட்பு தொடர்பாக கூறப்பட்டது.
4. திவ்விய நற்கருணை தொர்பானது
5. இறுதி இராப்போசன நிகழ்வு தொடர்பானது

35. யேசு கிறிஸ்துவை காட்டிக் கொடுப்பதற்காக யூதாசிற்கு கொடுத்த பொற்காசு முப்பதை பற்றி கூறப்படும் கருத்து
1. வாழ்வின் கணக்காக 2. நஷ்ட கணக்காக 3. காட்டிக் கொடுத்தலுக்கான கணக்காக
4. இறந்த கணக்காக 5. அன்பின் கணக்காக

36. இறைவனை யாவே என்று வைத்திருந்த எபிரேயப் பெயரை செப்துவாஜித் கிரேக்க மொழிக்கு மொழி பெயர்த்து இருப்பது.
1. எலோகிமாக 2. ஆண்டவராக 3. யாவேயாக 4. யேசுகிறிஸ்துவாக 5. இம்மானுவேலாக

37. மறுவாழ்வ பற்றி நற்செய்திகளில் கூறும் முதல் ஆதாரம்
1. வெறும் கல்லறை 2. எம்மாவுஸ் பயணம் 3. இறுதி இராப்போசணம்
4. சிலுவையில் மரணித்தல் 5. விண்ணரசின் வருகை

38. யேசு திருமுழுக்கு யோவானிடம் திருமுழுக்குப்பெற்று தண்ணீரிலிருந்து கரைக்கு வந்தபோது வானம் திறக்கப்பட்டது ஊடாக வெளிப்படும் கருத்து
1. யேசு கிறிஸ்து பாவியில்லாதவர் என்பதை வெளிப்படுத்த 2. இறை தன்மை யேசுவின் மீது இறங்கல்
3. யேசுகிறிஸ்து பாவ பொறுப்பை ஒப்படைத்தமை 4. உலகத்தின் மீட்பரின வருகை பற்றி
5. விண்ணுக்கும் மண்ணுக்குமிடையே ஒரு தொடர்பாடல் இடம் பெறுவது

39. பாலைவனத்தில் யேசுகிறிஸ்து முகம் கொடுத்த சோதனைகளில் சாத்தனை வணங்கி அனைத்து நாடுகளையும் கைப்பற்றுவதன் ஊடாக கருதப்படுவது.
1. பலம் 2. செல்வாக்கு 3. தலைமைத்துவம் 4. புகழ்ச்சி 5. அகங்காரம்

40. திருப்பலியின் சொல்லப்படும் "விசுவாசிகளின் மன்றாட்டை குறிக்கும் வேறு பெயர்
1. பாவிகளின் செபம் 2. நம்பிக்கையின் செபம் 3. புகழ்ச்சியின் செபம்
4. பரிந்துரை செபம் 5. நன்றி செலுத்தும் செபம்

41. திவ்விய நற்கருணை பற்றி கற்றலில் சமநோக்கு நற்செய்தியாளர்களும் 1 கொரிந்தியர் திருமுகத்திலும் "கிரேக்க மொழியில்" "சோமா" (Soma) வாக பாவிப்பது.
1. உடல் 2. வாழ்வு 3. உணவு 4. அப்பம் 5. திராட்சைரசம்

42. திவ்விய நற்கருணை ஏற்படுத்தல் தொடர்பாக சமநோக்கு நற்செய்தியாளர் மூன்று பேர் குறிப்பிட்டிருந்தாலும் வேறுபாடுகள் காணப்படுகின்றன. அதற்கு காரணம் இரண்டு பாரம்பரியங்களை பின்பற்றி இருப்பது புனித மத்தேயு உள்ளடக்கியுள்ள பாரம்பரியம்
1. அந்தியோக்கியா பாரம்பரியம் 2. எருசலேம் பாரம்பரியம் 3. எலோகிம் பாரம்பரியம்
4. இணைதிருமுறை பாரம்பரியம் 5. குரு பாரம்பரியம்

43. திவ்விய நற்கருணை ஏற்படுத்தல் தொடர்பாக புதிய ஏற்பாட்டில் உள்ள கருத்துகளுள் பழமையான கருத்தை குறிப்பது.
1. மதேயு 26/26 - 28 2. மாற்கு 14/22 - 24 3. லூக்கா 22/19 -20
4. புனித பவுல் 1 கொரி 11/23 - 26 5. புனித பவுல் 1 நெசலோனிக்கர் 11/23 - 26

44. திவ்விய நற்கருணையை பெறுவதற்காக ஆன்மீக ஆயத்தம் செய்வதின் தேவையை பனித பவுல் தவிர குறிப்பிடப்பட்டிருக்கும் நூல்
1. டிடாக்கே 2. கத்தோலிக்க திருச்சபை சட்டம் 3. அப்போஸ்தலர்களின் நூல்
4. இணைந்திருமுறை நூலில் 5. பஞ்சாகமத்தில்

45. திருத்தொண்டர்களுள் நற்செய்தியை போதிப்பதற்கும் திருமுழுக்கு கொடுப்பதிலும் ஈடுபட்டவர்கள்
1. ஸ்தேவான், தீமோன் 2. பிலிப்பு, தீமோன் 3. ஸ்தேவான், பிலிப்பு
3. ஸ்தேவான், நிக்கொலா 5. பிலிப்பு, நிக்கொலா

46. (தி.ப 10/1-48) கு ஏற்ப யூதேய மக்களுக்கு இரக்கச் செயல்கள் பல புரிந்து இறை வேண்டலில் ஈடுபட்டு இத்தாலியா எனப்பட்ட படைப்பிரிவில் நூற்றுவ தலைவராக இருந்தவர்.
1. அந்தியோக்கிய கொர்னேலிஸ் 2. எத்தியோப்பிய கொர்னேலிஸ் 3. சமாரிய கொர்னேலியு
4. செசாரிய கொர்னேலியு 5. எப்பிசிய கொர்னேலியு

47. உரோம நாட்டில் ஏற்பட்ட தீவைப்புக்கு கிறிஸ்தவர்களே பொறுப்புக்கூற வேண்டியவர்களாவர் என அவர்களை கொடூரமாகத் துன்புறுத்திய பேரரசன்
1. நீரோ அரசன் 2. தொமீசியன் மன்னம் 3. மக்சினஸ் அரசன்
4. திராஜன் அரசன் 5. மாற்குஸ் அவுரேலியன் மன்னன்

48. புனித யோவானை எண்ணெய் கடாரத்தில் இட்டும் அவருக்கு எந்த தீங்கும் இடம் பெறாததால் அவரை நாடு கடத்திய தீவு யாது?
1. தினிவ 2. பத்மு 3. சைப்ரஸ் 4. கிரிட் 5. மாலைதீவு

49. பிலிப்பும் எத்தியோப்பிய அலியும் சந்திக்கும் போது அவர் வாசித்துக் கொண்டிருந்த நூல்
1. எபேசிய இறைவாக்கினர் நூல் 2. எசேக்கியேல் இறைவவாக்கினர் நூல்
3. எசாயா இறைவாக்கினர் நூல் 4. ஒசியா இறைவாக்கினர் நூல்
5. யோவேல் இறைவாக்கினர் நூல்

50. பெந்தகோஸ்து நிகழ்வின் ஊடாக அவரவர் மொழிகளில் கதைப்பதை கேட்டது வெளிப்படுத்துவது
1. கிறிஸ்தவ மறையானது பிறமொழிகளில் கதைக்கும் சக்தி உள்ளமை
2. கிறிஸ்தவ சீடர்கள் தூயத்துவத்தில் பூரணம் அடைந்திருப்பது.
3. அன்று விழாவிற்கு வந்தவர்கள் தூய ஆவியால் பூரணமடைந்தமை
4. கிறிஸ்தவ மறையானது ஓர் இனத்துக்கோ ஒரு நாட்டுக்கே மட்டுப்படுத்தப்பட்டதன்று
5. கிறிஸ்தவ மறை யூதேய மறையின் பகுதியாக கூறுதல்.

அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை/ All Rights reserved

# வடமேல் மாகாண கல்வித் திணைக்களம்
# Provincial Department of Education - NWP

43 T II

முதலாந் தவணைப் பரீட்சை – தரம் 13 – 2018

**First Term Test - Grade 13 - 2018**

சுட்டெண் : ........................ கிறிஸ்தவம் II Christianity II காலம் : 3 மணி

- **பகுதி I இலிருந்து 2 வினாக்களுக்கும் பகுதி II இலிருந்து 3 வினாக்களுக்கும் மொத்தமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

## பகுதி - I

01. i. (கி.மு 639 - 609) யோசியா அரசரின் காலத்தில் யூதேய தேசத்தின் சமூக மற்றும் சமயரீதியான சீர்திருத்தங்களக்கு உதவி செய்த இரண்டு இறைவாக்கினரை குறிப்பிடுக.

ii. (கி.மு 37 - 4) காலத்தில் பலஸ்தீனா மற்றும் ஜெருசலேமை ஆண்ட பெரிய ஏரோது அரசர் பற்றிய முக்கியமான நான்கு விடயங்களை எழுதுக.

iii. ஆபிரகாமின் அழைப்பினூடாக எங்கள் அழைப்பு பற்றி விளங்கிக் கொள்ளும் விதம் ஆறு குறிப்பிடுக.

iv. திருமுழுக்குப் பெற்ற கிறிஸ்தவர் இறைவாக்கினராவர் மற்றவர்களை நல்வழிக்கு எடுப்பதற்கு உம்மால் செய்யக்கூடியவைகளுள் 4 குறிப்பிடுக. (புள்ளிகள் 2 + 4 +6 + 8 = 20)

02. i. ஜோர்தான் ஆற்றுக்குக் கிழக்கே உள்ள மலைத் தொடர்களிலிருந்து ஆரம்பமாகும் ஆறுகள் 2ஐ குறிப்பிடுக.

ii. சீனாய் உடன்படிக்கையினூடாக மூவித இறையாசீர்கள் இஸ்ரயேல் மக்கள் பெற்றனர். அதில் குருத்துவ அரச என்பதற்கு நான்கு விடயங்களை எடுத்துக்காட்டுக.

iii. கோத்திரமாக வாழ்ந்த இஸ்ரயேல் மக்கள் சீனாய் உடன்படிக்கையினால் ஒழுக்கமுள்ள சமுதாயமாகமாற கடைப்பிடிக்க வேண்டிய ஆறு விடயங்களை குறிப்பிடுக.

iv. புனித பவுல் கொரிந்திய சபைக்கு கூறியுள்ளதன்படி அன்பிலிருந்து விலகிச் செல்லும் எந்தவொரு கொடைக்கும் பெறுமதி இல்லை என்கிறார். பெறுமதியை ஏற்படுத்த (1 கொரி 13) படி செய்யக்கூடியவைகள் நான்கு எழுதுக.

(புள்ளிகள் 2 + 4 +6 + 8 = 20)

03. i. சமநோக்கு நற்செய்திகளில் கூறப்படாத இரண்டு புதுமைகள் எழுதுக.

ii. புனித பவுலுடைய திருமுகத்தில் காணக்கூடிய பண்புகள் நான்கு குறிப்பிடுக.

iii. தேவநற்கருணை பெற்ற பிள்ளை அன்பை தியாகமாக பிறருடன் பகிர்ந்து கொள்ளக் கூடிய சந்தரப்பங்கள் ஆறு குறிப்பிடுக.

iv. ஆதிக்கிறிஸ்தவ சபை கலாபனை சமயத்தில் முகம் கொடுத்த விருந்திலிருந்து தற்காலத்தில் கிறிஸ்தவ சபைக்கு எதிராக வரும் சவால்களை கட்டுப்படுத்துவதறகாக செய்யக்கூடிய நடவடிக்கைகள் 4 எழுதுக.

(புள்ளிகள் 2 + 4 +6 + 8 = 20)

## பகுதி - II

04. i. இஸ்ரயேல் வரலாற்றை கற்கும் போது விடுதலைப்பயண நிகழ்வு ஊடாக இறைவன் அளித்த வாக்கு நிறைவேறுவதும், இறை அன்பை அனுபவிப்பதற்கும் சரியான மார்க்கத்தை எடுத்துக் காட்டுக. (புள்ளிகள் 10)

ii. மோசேயின் பொறுப்பானது இஸ்ராயேல் மக்களுடன் இருந்து இடையராக வழிகாட்டுவதாகும். நீங்கள் இளைஞராக இருந்து தற்கால சமூகத்திற்கு இடையராகின்ற விதத்தை நான்கு காரணங்களினூடாக விளக்குக. (புள்ளிகள் 10)

05. i. ஆமோஸ் இறைவாக்கினர் குறிப்பிட்ட சமூக அநீதிகள் ஐந்து குறிப்பிட்டு இன்றைய சமுதாயத்தில் இடம் பெறும் அநீதிக்கு எதிராக நீங்கள் செயற்படும் விதத்தை எடுத்துக்காட்டுக.

ii. யூத சமூக பின்னணியில் பாவிகள் என கருதப்பட்டோர் இருந்த நிலமைகள் ஐந்து எடுத்துக்காட்டி, இறைவன் பாவத்தை மறுத்து பாவிகளை ஏற்றுக்கொண்டார். இன்றைய சமூகத்தில் குற்றவாளிகளை நல்வழிப்படுத்த நீங்கள் எடுக்கும் நடவடிக்கைகளை விளக்குக. (புள்ளிகள் 10 x 2 = 20)

06. i. மத்தேயு நற்செய்தி விசேடமாக யூத கிறிஸ்தவர்களுக்காக முன்வைத்திருப்பதோடு அதில் உள்ளடங்கி இருக்கும் ஐந்து விடயங்கள் எழுதி மத்தேயு நற்செய்தியின் முக்கிய நோக்கத்தை விளக்குக.

ii. (மத் 18/21 - 35) மன்னிக்க மறுத்த பணியாளர் உவமை ஊடாக விளக்கப்படுவது குறிப்பிட்டு அதன் மூலம் இன்றைய சமுதாயத்தில் பதவிகள் பெறும் நபர்களுக்கு அளிக்கும் செய்தியை விளக்குக. (புள்ளிகள் 10x2= 20)

07. i. யேசுகிறிஸ்துவின் பணிவும், கீழ்படிவும் அவர் மகிமையைப் பெற அமைந்துள்ளதை எடுத்துக்காட்டி யேசு கிறிஸ்துவின் பணிவும், கீழ்படிவும் எங்கள் வாழ்விற்கு முன் மாதிரியாக இருக்கக்கூடிய விதத்தினை விளக்குக.

ii. ஆதித்திருச்சபை வளர்ந்த விதத்தை எடுத்துக் காட்டி தற்போதைய திருச்சபையின் வளர்ச்சிக்கு உங்கள் பங்களிப்பு பற்றி எடுத்துக் காட்டுக. (புள்ளிகள் 10 x 2 = 20)

08. i. பத்தாம் கலாபனை சமயத்தில் அதாவது தியோகிளிசியன் பேரரசன் காலத்தில் கிறிஸ்தவர்களுக்கு எற்படுத்திய கலாபனை முறைகள் ஐந்து எழுதி மிலான் சாசனம் மூலமாக கிறிஸ்தவர்களுக்கு சுதந்திரகாலம் ஏற்படுத்திய விதத்தை விளக்குக.

ii. பணியின் மற்றும் துன்புறுத்தலின் வழியாக அரசராக அழைக்கப்பட்ட யேசுகிறிஸ்து திருமுழுக்குப் பெற்று பாலைவனத்திற்கு சென்றார். அவர் மூவித சோதனைகள் ஊடாக எங்கள் அழைப்பின் பணியை விளக்குக. (புள்ளிகள் 10 x 2 = 20)

# முதலாம் தவணைப் பரீட்சை - 2018

# கிறிஸ்தவம் Christianity - 13 தரம்

## பகுதி - I விடைகள்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | 1 | 11. | 3 | 21. | 1 | 31. | 2 | 41. | 1 |
| 2. | 4 | 12. | 5 | 22. | 2 | 32. | 4 | 42. | 2 |
| 3. | 2 | 13. | 4 | 23. | 4 | 33. | 1 | 43. | 3 |
| 4. | 3 | 14. | 2 | 24. | 3 | 34. | 3 | 44. | 1 |
| 5. | 3 | 15. | 1 | 25. | 1 | 35. | 4 | 45. | 3 |
| 6. | 1 | 16. | 5 | 26. | 4 | 36. | 2 | 46. | 4 |
| 7. | 5 | 17. | 4 | 27. | 1 | 37. | 1 | 47. | 1 |
| 8. | 1 | 18. | 2 | 28. | 3 | 38. | 5 | 48. | 2 |
| 9. | 3 | 19. | 5 | 29. | 1 | 39. | 2 | 49. | 3 |
| 10. | 2 | 20. | 1 | 30. | 3 | 40. | 4 | 50. | 4 |

(புள்ளிகள் 1x2=100)

## பகுதி – II

(1) I. குல்தாவும் நாகூம், செப்பனியா, அபகூக்கு, எரேமியா.

II. • யூத சமயத்தைத் தழுவினார்.
- இவர் 10 திருமணங்கள் செய்துள்ளார்.
- இவர் குரூரமான ஆட்சியாளராவார்.
- இவருடைய இரு கைகளும் இரத்தத்தினால் தோய்ந்தவையாகும்.
- தனது மனைவியையும் பிள்ளைகளையும் கொலை செய்தவர்.

III. • அழைப்பு முழுமையாக வருவது கடவுளிடமிருந்து.
- அழைப்புப் பெறுபவரின் தன்பட்ட தகுதிகளைப் பாராமல் இறைவன் விருப்பமே அழைப்புக்கு முக்கிய காரணமாகும்.
- அழைப்பும், ஏற்றுக் கொள்ளலும் தன் வாழ்க்கை முழுதும் அர்ப்பணிக்க தயாராகுதல்.
- தன்னை மறந்து கடவுள் கொடுக்கும் வாழ்க்கையை ஏற்றுக் கொள்ள தயாராகுதல்.
- இறை அழைத்தலை ஏற்றுக் கொள்வதாயின் எல்லாவற்றையும் மறந்து இறைவன் மீது முழு நம்பிக்கை வைத்தல்.
- தனக்கு வரும் எல்லா சவால்களுக்கு மத்தியிலும் இறை விருப்பத்திற்கு தலை வணங்குதல்.

IV. • நீதி நியாயத்துக்காக செயற்படல்.
- சமய வகுப்புகளில் மறையாசிரியராக பணியாற்றல்.
- ஊடகப் பயன்பாடு.
- இல்லற தூதுப்பணி
- தியானமுறை
- திருவிவிலிய பாடநெறிகளை நடாத்துதல்.
- உண்மைக்காக சான்று பகர்தல்

(மாணவர் எழுதியுள்ள விடைக்கேற்ப புள்ளி வழங்கவும்)

(2) I. யாகோபு, யோவான், அந்திரேயா, பேதுரு.

II. • பழைய ஏற்பாட்டின் குருக்கள் கிடைக்க வரம் பெற்ற குருவினராவர்.
• பழைய ஏற்பாட்டில் குருக்கள் கிடைக்க வரம் பெற்றவர்கள்.
(ஆசிரிய வழிகாட்டி 12 பக்கம் 65)

III. • பத்துக்கட்டளைகள்.
* எக்காலத்துக்கும் பொதுவான நீதிகள்
* ஆன்மிக நீதிகளும், ஒழுக்கமான நீதிகளும் என்று அறிமுகப்படுத்தல்.
* இறை - மனித தொடர்பும், மனித - மனித தொடர்பையும் விருத்தி செய்வதற்கு பத்துக்கட்டளை உதவுகின்றமை.
(பத்துக்கட்டளைகளுள் ஏதாவது ஒன்று எடுத்து இருந்தால் புள்ளி வழங்கவும்)

IV * கொரிந்து சபை பல்வேறுபட்ட கொடைகளால் நிறைவடைந்த சபையாகும்.
* திருத்தூதரால் வேறுபடுத்தப்பட்ட முயற்சித்த சபையாகும்.
* புனித பவுல் கொரிந்து சபைக்கு அன்பின் பெருமையை குறித்து கூறியுள்ளது (1கொரி. 13) இதனூடாக செய்யக் கூடியவைகள் எடுத்திருந்தால் புள்ளி வழங்கவும்.

(03) I. தண்ணீரை இரசமாக்குதல், பெத்சாய்தாவில் முடக்குவாதமுற்றவரை குணப்படுத்தல், இலாசரை உயிர்ப்பித்தல், கண் பார்வையற்றோருக்கு பார்வையளித்தல்.

II. * பெரும்பாலும் பொதுக்குழுவொன்றை இலக்கு வைத்தல்.
* சபையின் ஆன்மிக வளர்ச்சிக்கு அறிவுரை வழங்கல்.
* பவுலின் யூத உரிமையை வலியுறுத்தல்
* போதனை வடிவில் எழுதப்பட்டிருத்தல்.
(தரம் 12 வழிகாட்டி · பக்கம் 136)

• முறையாக திவ்விய நற்கருணை பெறுபவர்களிடம் ஆன்மிக ஆயத்தமும், உடல் ஆயத்தமும் இருக்க வேண்டும்.
• இறை அன்பினால் போஷாக்கு அடையும்.
• ஏழைகளுக்காக அவர்களின் பசியான சந்தர்ப்பங்களில்
• நோயாளிகளுக்காக அவர்களுடைய தேவைகளில்.
(போன்ற விடயங்கள் இருப்பின் புள்ளி வழங்கவும்)

IV • சவால்களுக்கு தைரியமாக முகம் கொடுத்தல்.
• சவால்கள் முன்னே நம்பிக்கையுடன் செயற்படல்.
• துன்புறுத்தல்கள் முன்னே தூய ஆவியின் சக்தியை பெறுவதற்கு செபம் செய்தல்.
• நம்பிக்கையின் சாட்சியாக இருத்தல்.

## பகுதி - II

(4) I. முதற்சொல்வது எகிப்தினை கைப்பற்றல்.

* செமித்திக் இனத்திற்குரிய ஆபிரகாமின் பரம்பரைக்கு உரிமை -யானவர்.
* இதனால் யோசேப்பிற்கு எகிப்து அரசனாக இடம் கிடைத்தல்.
* இஸ்ராயேல் இனம் பெருகுதலும், அடிமையாதலும்.
* இதன்படி இறைவனின் ஒப்பந்தமாக பெரிய இனமாக பெருகுதல்.
* மோசேயின் பிறப்பு இடம்பெறல்.
* அரசமாளிகையில் வளர்தல்.
* மீதியான் நாட்டிற்கு தப்பியோடல்.
* இஸ்ராயேல் மக்கள் எகிப்திலிருந்து மீட்டெடுக்கப்பட்டு பாலைவனத்தில் பயணம்.
* இறை அன்னை கண்டுணர்தல்.
* ஒப்பந்தத்திற்கு ஏற்ப பலஸ்தீனாவில் குடியேறல்.

(மாணவர் தெளிவுபடுத்தியுள்ளமைக்கு அமைய புள்ளி வழங்கவும்)

II * இறைவன் மோசேக்கு அழைப்பு கொடுத்தது இஸ்ராயேல் மக்களின் துன்ப துயரங்களில் அவர்களை கைவிடாமல் பாதுகாத்துக் கொள்ள.

* இறை அழைப்பை மறுக்காமல் ஏற்றுக் கொள்ளல்.

* இறை அழைப்பு எங்கள் எல்லோருக்கும் வரும்.
* வாழ்க்கையில் ஏற்படும் சவால்களுக்கு மத்தியில் இறைவன் மீது நம்பிக்கை வைத்து கொண்டு எங்கள் வாழ்வை கொண்டு செல்லல்.

(மோசேயினை அடிப்படையாக் கொண்டு எழுதப்பட்டிருப்பின் புள்ளி வழங்கவும்)

(05) I. ஆமோஸ் இறைவாக்கினர் எடுத்துக்காட்டிய சமூக அநீதிகள்.

• இறைவாக்கினரின் செய்தியின் இலக்கு வட அரசை நோக்கியதாக இருந்தது.
* வியாபாரம் வளர்ச்சியடைந்ததனால் உயர்ந்த சமூக மொன்று உருவாகியது.
* அவர்கள், ஏழை, எளிய மக்களை சுரண்டுவதில் ஈடுபட்டனர்.
* ஏழை பணக்காரர் என்ற பாகுபாடு வளர்ச்சியடைந்தது.
* உயர்ந்த நிலையில் இருந்தோர் சொகுசு வாழ்க்கை வாழ்ந்தனர்.

(இன்றைய சமூகத்தில் இடம்பெறும் அநீதிகளுக்கு எதிராக செயற்படும் முறை பற்றி எழுதி இருப்பின் புள்ளி வழங்கவும்)

II * நோயாளிகள், வரிதண்டுவோர், இடையர்கள், விபச்சாரிகள். பாவிகளாக கருதப்பட்டனர்.

* அவர்களுடைய குறைபாடுகள், பலவீனங்களுக்காக யூத சட்டத்தில் மன்னிப்பு கிடைக்காமை.
* விபச்சார பெண்களை கல்லெறிந்து கொலை செய்தல்.
* வரிதண்டுவோர் தேசதுரோகிகளாக கருதப்பட்டனர்.

(இன்றைய சமூகத்தில் குற்றவாளிகளை நல்வழிக்கு கொண்டு வருதல் தொடர்பாக மாணவர்கள் எழுதியுள்ள விடைக்கு உரிய புள்ளி வழங்கவும்)

(6) I. • இந்நூல் யூதப்பின்னணியில் விபரிக்கப்பட்டுள்ளதை காண முடியும்.
(6)

• மூதாதையர் பட்டியலோடு ஆரம்பிப்பதோடு யேசு: ஆபிரகாம், தாவீதுடையவும் மகனாக கருதப்படுகின்றார்
• பழைய ஏற்பாட்டின் நிறைவு யேசு கிறிஸ்து எனப்படுதல்
• யேசு கிறிஸ்து யூதர்களின் அரசராக முன்னிற்றல்.

மத்தேயு நற்செய்தியின் நோக்கம் மனுவுரு எடுத்த யேசு கிறிஸ்து யூத மக்கள் எதிர்பார்த்துக் கொண்டிருந்த மெசியா என்பதை விளக்குதல்.

• பழைய ஏற்பாட்டில் மெசியா தொடர்பான வாக்குறுதிகள் யாவும் புதிய ஏற்பாட்டில் யேசுவினால் நிறைவடைந்தது என்பது உறுதி செய்யப்படுவதற்கு மத்தேயு விசேட முயற்சி எடுத்துள்ளார்.

II • மன்னிக்க மறுத்த பணியாளர் உவமை (மத் 18:21-35)
பணியாளருக்கு கடனை திருப்பிக் கொடுக்க முடியாமையினை கூறி மன்னிப்புக் கேட்டல்.

• அரசன் பணியாளனுக்கு மன்னிப்புக் கொடுத்தல்.

இவ் உவமையை எமது மற்றும் நாட்டு அரசியல் தலைமைத்துவத்தைப் பற்றி பார்க்கும் போது நாட்டின் மக்கள் மிகவும் தாழ்வான நிலையில் உள்ளனர். இவ்வாறான கருத்துக்கள் எழுதப்பட்டிருப்பின் புள்ளி வழங்கவும்)

(7) I. * யேசு கிறிஸ்து இறைசாயல் பெற்றாலும் இறை தமையான தன்மையை விட்டு அடிமை நிலை பூண்டு எம்மைப் போன்று மனிதராகப் பிறந்தார்.

* மனிதனாக இருந்து அவர் சிலுவை மரணம் வரைக்கும் கீழ்ப்படிவது.
* இறைவன் அவருடைய உடலை தோல்வியடைய இடம் கொடுக்காமல் உயிர்த்தெழுந்தார்.
* கீழ்ப்படிந்த பண்பை கிறிஸ்தவர்கள் பெற்றுக் கொள்வது கிறிஸ்துவின் முன்மாதிரியாக இலம்.
* உண்மைக்கு சாட்சி பகர்தல்.

(பொருத்தமான விடை இருப்பின் புள்ளி வழங்கவும்)

II * யேசு கிறிஸ்துவின் நாமத்தினால் திருமுழுக்குப் பெற்று அவர் இறைமகனாகவும் விடுதலை அளிப்பவராகவும் ஏற்றுக் கொண்டு நம்பிக்கையுடன் அவருடைய படிப்பினையுடன் வாழ்கின்ற மக்கள் கூட்டமாகும்.

* யேசு கிறிஸ்து சீடர்கள் 12 பேரை தெரிவு செய்து இறை பணிக்கு பயிற்றுவித்தல்.
* ஒழுக்கரீதிய தலைமைத்துவம் பேதுருவுக்கு அளித்தல்
* யேசு புதிய எதிர்பார்ப்பை அளித்து போட்டத்திற்கு சென்றமை.
* பெந்தகொஸ்து திருநாளன்று தூய ஆவியின் வருகை இடம் பெற்றமை.
* அங்கு கூடியிருந்த 120 பேரையும் தூய ஆவியின் வல்லமையால் போஷித்தமை.
* பல மொழிகளில் பேசியமை
* பேதுருவின் முதல் அருளுரையினால் 3000 பேர் மனமாற்றி திருமுழுக்குப் பெற்றமை.
* இவ்வாறாக திருச்சபை வளர்ச்சி பெற்றமை.

- அவர்களுடைய வாழ்க்கை அனைவருக்கும் முன்மாதிரியாக இருந்தமை.
- இஸ்தேவானின் மரணத்தின் பின்பு பல இடங்களுக்கு சென்றமை.
- பிறருக்கு நற்செய்தியை கொண்டு செல்லல்.

(மேலே குறிப்பிட்ட விடயங்களை தெளிவுபடுத்தி மாணவர்கள் எழுதியிருக்கும் விடையினைப் பார்த்து புள்ளியிடவும்)

(8) I. * புனித நூல்களையும் கோவில்களையும் எரித்தல்.
* கிறிஸ்தவர்களை அரச பணியிலிருந்து நீக்குதல்.
* கிறிஸ்தவ அடிமைகளை விடுதலை செய்வதற்கு எதிராக சட்டம் பிறப்பிக்கப்பட்டது.
* நாடு கடத்தப்படல்.
* மரங்களிலும் தூண்களிலும் கட்டி எரித்தல்.
* சிரச்சேதம் செய்தல்

(வழிகாட்டி-13 பக்கம் - 22)

⇒ பேரரசில் வாழ்கின்ற அனைவருக்கும் தமது மறையைப் பின்பற்ற முழுமையான சுதந்திரம் பெற்றுக் கொண்டது.
⇒ கிறிஸ்தவர்களிடமிருந்து பறிமுதல் செய்யப்பட்ட சொத்துக்களும் மீண்டும் அவர்களுக்கு கொடுக்கப்பட்டன.
⇒ கிறிஸ்தவர்களுக்கு எதிராக விதிக்கப்பட்டிருந்த எல்லாச் சட்டங்களும் இரத்துச் செய்யப்பட்டன.

II * மூன்று சோதனைகளுக்கு முகம் கொடுத்தல்.
* கல்லை அப்பமாக மாற்றும் சக்தியை வெளிக்காட்டல்.
* ஆலயத்தின் மேலே இருந்து குதிக்கும்படி கூறல்
* சாத்தானை வணங்கி அரசுகளை கைப்பற்றுதல்

இஸ்ராயேல் அரசர்கள் பலம், புகழ், செல்வத்தின் மீது தமது அரசை கட்டியெழுப்புதல். யேசுவின் அரசில் அவை நிராகரிக்கப்படுகின்றன.

(தரம் -13, பக்கம் - 3 ஆசிரிய வழிகாட்டியை பார்க்கவும்)

⇒ இறை அழைப்பின் போது செய்யும் பணிகளாக புதைக்க உதவுதல், வாசிக்க உதவுதல், அவசர தேவைகளின் போது திருவுணவு வழங்குதல், நற்கருணை ஆராதனை செய்தல், அருளடையாளங்களை பெறுவதற்கு ஏனையோரை தயார் செய்தல், நற்கருணை தாசர்களாக நற்கருணை பகிர்தல். (போன்ற பொருத்தமான விடைகளுக்கு புள்ளி வழங்கவும்)

LOL.lk
BookStore

විභාග ඉලක්ක
පහසුවෙන් ජයගන්න

ඕනෑම පොතක් ඉක්මනින්
නිවසටම ගෙන්වා ගන්න






| කෙටි සටහන් | පසුගිය ප්‍රශ්න පත්‍ර | වැඩ පොත් | සඟරා | O/L ප්‍රශ්න පත්‍ර
| A/L ප්‍රශ්න පත්‍ර | අනුමාන ප්‍රශ්න පත්‍ර | අතිරේක කියවීම් පොත්
| School Book | ගුරු අත්පොත්

pesuru Prakashana Private Ltd. | Akura Pilot | සමනල දැනුම | T | සතර

පෙර පාසලේ සිට උසස් පෙළ දක්වා සියළුම ප්‍රශ්න පත්‍ර,
කෙටි සටහන්, වැඩ පොත්, අතිරේක කියවීම් පොත්, සඟරා
සිංහල සහ ඉංග්‍රීසි මාධ්‍යයෙන් ගෙදරටම ගෙන්වා ගැනීමට

www.LOL.lk වෙබ් අඩවිය වෙත යන්න